விலை ரூபா: 10.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: நான்கு

சங்கு 07 வள்ளுவர் ஆண்டு 2037 புரட்டாதி 16 திங்கட்கிழமை (02.10.2006) தொலைபேசி 222 3378, 222 7644 ஒலி 278

ராம்கோ

MADRAS CEMENTS LTD

RAMCO CEMENT

RAMCO

ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.

ராம்கோ சீமெந்து

# சமாதானப் பேச்சுக்கள் தொடர்பில் அரசினால் 3 நிபந்தனைகள் விதிப்பு

## நோர்வேயூடாக இன்று அறிவிப்பு!

(கொழும்பு)

அரசாங்கத்தினால் முன்வைக்கப்படும் மூன்று நிபந்தனைகளை விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் ஏற்று செயற்படுவதாக எழுத்து மூலமாக அல்லது வாய்மொழி மூலமாக உறுதியளித்தால் மட்டுமே எதிர்கால பேச்சுக்கள் நடை பெறுமென அரசாங்கம் நோர்வேயிடம் தெரிவித்துள்ளது.

இன்று நோர்வேயின் சிறப்புத்தூதுவர் ஜோன் ஹான்சன் பௌயரிடம் இது குறித்து தெரிவிக்கப்படவுள்ளதாக அரசு தரப்புச் செய்திகள் தெரிவித்தன. (04 ஆம் பக்கம் பார்க்க)

## அரச சமாதானக் குழுவினருடன் ஹான்சன் பௌயர் இன்று பேச்சு

### நாளை கிளிநொச்சி விஜயம்

(கொழும்பு)

இலங்கைக்கான நோர்வேயின் விசேட சமாதானத் தூதுவர் ஜோன் ஹான்சன் பௌயர் நேற்று பிற்பகல் 2.15 மணியளவில் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தார்.

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் அரசாங்கத்திற்குமிடையே சமாதானப் பேச்சுவார்த்தையை மீள ஆரம்பிப்பது தொடர்பாக இரு தரப்பினரிடமும் பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்காகவே அவர் இலங்கை வந்துள்ளதாக நோர்வேத் தூதரகம் தெரிவித்துள்ளது.

இதற்கமைய இன்று அரச சமாதானப் பேச்சுக்குழுத் தலைவர் நிமால் சிறிபால டி சில்வா மற்றும் சமாதான செயலகப் பணிப்பாளர் ஆகியோரைச் சந்தித்து கலந்துரையாடும் பௌயர் நாளை கிளிநொச்சிக்கு விஜயம் செய்து (04 ஆம் பக்கம் பார்க்க)

## உயர்தரப்பரீட்சை பெறுபேறுகள் நாளை

(கொழும்பு)

க.பொ.த.உயர் தரப்பரீட்சைப் பெறுபேறுகள் நாளை இணையத்தளத்தினூடாக வெளியிடப்படவுள்ளதாக பரீட்சை ஆணையாளர் நாயகம் அநுர எதிரசிங்க தெரிவித்துள்ளார்.

இப் பெறுபேறுகளை இன்று வெளியிடத் திட்டமிடப்பட்டிருந்தபோதும் கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களின் பரீட்சைக்குத் தோற்றிய 174 மாணவர்களின் பெறுபேறுகளை கொழும்புக்குக் கொண்டு செல்வதில் ஏற்பட்ட தாமதம் காரணமாக இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது எனத் தெரிவித்தார். (04 ஆம் பக்கம் பார்க்க)

## இயல்பு வாழ்க்கை ஏற்படுத்தி கல்வியை தொடர ஒத்துழையுங்கள்

### யாழ்.ஆயர் அவசர வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் இயல்பு வாழ்க்கையை தோற்றுவித்து கல்விச்சேவையைத் தொடர ஒத்துழைப்பு வழங்குமாறு உரிய தரப்பினர் அனைவரையும் வேண்டிக்கொள்வதாக யாழ்.ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கைவருமாறு,நடைபெற்றுக் கொண்டிருக்கும் கொடிய போரினால் நாம் எமது நிலத்தை -வீடுகளை -செல்வத்தை-சேமிப்புக்களை-கல்விமான்களை-பெற்றோர்களை-இளையோரை- ஏன் எமது மனித மாண்பையும் சிந்திக்கின்ற கருத்து வெளியிடுகின்ற சுதந்திரத்தை யும் இழந்துள்ளோம்.

ஒரு பானை கஞ்சிக்காக அரசின் நிவாரணத்தை நம்பி அனைத்தையுமே இழந்து விட்டோம். இந்த அனைத்து இழப்புக்கள் மத்தியிலும் தமிழ் மக்கள் தமது பிள்ளைகளின் பொன்னான கல்வியை ஒருபோதும் மறந்தவர்கள் அல்ல. (04 ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.நா.பொதுச் செயலர் தேர்வுக்கு தென்கொரியாவுக்கு இலங்கை ஆதரவு

(கொழும்பு)

ஐ.நா.பொதுச் செயலர் பதவிக்குப் போட்டியிடும் தென்கொரிய வேட்பாளர் பான் கி மூனுக்கு இலங்கை ஆதரவளிக்கவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

ஜெயந்த தனபால அப்போட்டியிலிருந்து விலகியுள்ள நிலையில் தென்கொரியாவுக்கு ஆதரவை வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஐ.நா.பொதுச் செயலர் பதவிக்கு 9 வேட்பாளர்கள் போட்டியிட்டனர். தற்போது 6 பேர் போட்டியிடுகின்றனர்.

இதுவரை நடந்த 3 கருத்துக்கணிப்புத் தேர்தல்களில் தென்கொரிய வேட்பாளர் பான் கி மூன் முதலிடத்திலும் இந்திய வேட்பாளர் சசி தரூர் இரண்டாம் இடத்திலும் உள்ளனர். (ச-5)

## மனிதாபிமான சட்டங்களை இரு தரப்பும் மதிக்க வேண்டும்

### செஞ்சிலுவைச் சங்கம் கோரிக்கை

(கொழும்பு)

யாழ்ப்பாணத்தில் உள்ள மக்களுக்கான பொருட்கள் சென்றடைவது தொடர்பிலான சர்வதேச மனிதாபிமான சட்டங்களை அர சாங்கமும் தமிழீழ விடுதலைப்புலிகளும் மதித்து நடக்கவேண்டும் என்று சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

ஐ.சி.ஆர்.சி இது குறித்து சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் (04 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். அவலங்களை நிறுத்த யுத்தம் கைவிடப்படவேண்டும்

### கண்காணிப்புக் குழுத்தலைவர் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

யாழ்.மனித அவலங்களுக்கு முற்றுப் புள்ளி வைக்க இரு தரப்பினரும் போர் நடவடிக்கைகளை கைவிடவேண்டும் என்று இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுத்தலைவர் லார்ஸ் ஜொஹான் ஷோல்பேர்க் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கொழும்பு ஆங்கில ஊடகமொன்றுக்கு அவர் அளித்த நேர்காணலிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

யாழ்ப்பாண நிலைமைகள் மோசமாக வுள்ளன என்று நாம் எமது கண்காணிப்புக் குழுவினரின் நடவடிக்கைகள் மூலம் முடிவுக்கு வந்தோம். எமது கண்காணிப்புக்குழுவினர் தொடர்ந்து சுற்றுக்காவல் பணியில் ஈடுபட்டு மக்களின் கருத்துக்களை அறிந்து வருகின்றனர்.

அதேபோல நாம் தொடர்ந்தும் அரச சார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடி வருகின்றோம்.ஏ-9பாதையை உடனே திறக்க வேண்டுமென்று விடுதலைப்புலிகள் தான் வலியுறுத்து (04 ஆம் பக்கம் பார்க்க)

## சுன்னாகத்தில் கிரனைட் வீச்சு


(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் மின் பிறப்பாக்கி வீதியடியில் கடமையில் இருந்த இராணுவத்தின் மீது நேற்றுக் காலை 11.30 மணியளவில் கைக்குண்டு தாக்குதல் மேற்கொள்ளப்பட்ட தாக தெரிவிக்கப்படுகிறது.

இச் சம்பவத்தில் ஒரு இராணுவச் சிப்பாய் காயமடைந்தார். மேலும் நான்கு பொதுமக்கள் காயமடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

காயமடைந்தவர்கள் இணுவிலைச் சேர்ந்த அ.செல்வநாதன் (வயது 43) ,சுன்னாகத்தைச் சேர்ந்த ரி.தனேஸ்குமார் (வயது 31)ஆகிய இருவருடன் மேலும் இருவர் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.(ச-133)





ஆஸ்பத்திரி வீதியிலுள்ள சிறுவர் மகிழ்வகத்தில் நேற்று நடைபெற்ற சிறுவர் தின நிகழ்வுகளில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ்.மாவட்ட நீதிவான் இ.த.விக்னராஜா மற்றும் விருந்தினர்களையும் நிகழ்வில் சிறுமி ஒருத்தி வெண்ணிறத் துணியில் வாசகங்களை எழுதுவதையும் படங்களில் காணலாம்.

படங்கள்:-திலீபன்

# என் அனுபவத்தையும் தகுதியையும் சர்வதேசம் புறக்கணித்து விட்டது

## ஜயந்த தனபால

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம் பதவிக்கான வேட்பாளர் போட்டியில் வெற்றி பெறுவதற்கான எதுவித சாத்தியமும் இல்லாத நிலையில் விலகிக் கொண்ட ஜயந்த தனபால தான் விலகியமை குறித்து கருத்துத் தெரிவித்துள்ளார்.

சிறிலங்காவுக்குத் திரும்பி விட்ட ஜயந்த தனபால இதுதொடர்பில் கூறியுள்ளதாவது;

என்னுடைய அனுபவத்தையும் தகுதியையும் சர்வதேச சமூகம் புறக்கணித்து விட்டது. அதனால் இயற்கையாகவே வருத்தம் ஏற்படும்.

ஒரு தொழில் முறைசார் நெறிமுறைகள் சார் மிகக் குறைந்த திட்டமிடலில் நான் எனது வேட்பாளருக்கான தகுதிகளை முன்வைத்தேன். வேட்பாளர் போட்டியிலிருந்து விலகுவது என்ற முடிபு சரியான நேரத்தில் எடுக்கப்பட்ட முடிபுதான்.

தெற்காசியப் பிராந்தியத்திலிருந்து ஒருவர் தெரிவு செய்யப்பட வேண்டும் என்பதில் ஒருமித்த கருத்து உருவாகவில்லை.

தென்கொரிய நாட்டின் சார்பில் ஏற்கனவே ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம் பொறுப்பு வகிக்கப்பட்டுள்ளது.

இப்போது மிக நீண்ட ஓய்வுக்கு திட்டமிட்டுக் கொண்டுள்ளேன். ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம் பதவிக்கான முன்மாதிரித் தேர்தலில் மிக மிகக் குறைவான வாக்குகள் பெற்றமை தொடர்பாக இப்போது ஆராய்வது மிகவும் முன்கூட்டியே கருத்துக்களைச் சொல்வதாகும்.

ஐ.நா.செயலாளர் நாயகம் தேர்தல் நடைமுறைகள் முடிந்த பின்னர் அது குறித்து நீண்ட விளக்கமான அறிக்கையை வெளியிடவுள்ளேன் என்றார் ஜயந்த தனபால. (ச-5)

# எழுதுமட்டுவாள் நோக்கி நேற்று ஷெல் தாக்குதல்

## நான்கு படையினர் காயம்

(யாழ்ப்பாணம்)

எழுதுமட்டுவாள் பகுதியில் நேற்று நடைபெற்ற ஷெல் தாக்குதலில் நான்கு படையினர் காயமடைந்துள்ளனர்.

நேற்றுக்காலை 8 மணியளவில் புலிகளின். கட்டுப்பாட்டுப் பகுதிகளை நோக்கிப் படையினர் ஷெல் தாக்குதலை நடத்தினர். இதனையடுத்து படையினரின் நிலைகளை நோக்கி விடுதலைப்புலிகள் மேற்கொண்ட பதில் எறிகணைத் தாக்குதலில் நான்கு படையினர் படுகாயமடைந்துள்ளதாகப் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதேபோன்று நேற்று முன்தினம் மாலை நடைபெற்ற எறிகணை மோதல்களில் படையினர் தரப்பில் ஒருவர் கொல்லப்பட்டதாகப் படைத் தரப்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.(ச-5)

# யாழ்ப்பாணம் நோக்கி உணவுக் கப்பல்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாவுக்கான 2 ஆயிரத்து 800 மெற்றிக்தொன் உணவுப் பொருட்களை ஏற்றிய கப்பல் நேற்று கொழும்புத்துறை முகத்திலிருந்து யாழ். நோக்கிப் புறப்பட்டுள்ளது.

இதேவேளை இன்று 900 மெற்றிக் தொன் உணவுப் பொருட்களுடன் கப்பல் ஒன்று திருமலைத் துறைமுகத்திலிருந்து யாழ்.நோக்கிப் புறப்பட்டுள்ளது.

எதிர்வரும் காலங்களில் தனியார் வர்த்தகர்கள் உணவுப் பொருட்களைக் கொண்டு செல்லவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் ஜயசிங்க தெரிவித்துள்ளார். (ச-5)

# 4 ஆம் கட்ட நிவாரணம் வழங்க நடவடிக்கை

பங்கீட்டு அடிப்படையிலான நான்காம் கட்ட நிவாரண விநியோகத்தை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நிவாரணம் விநியோகம் தொடர்பாக யாழ். செயலகத்தில் நேற்று அரச அதிபர் க.கணேஷ் தலைமையில் கலந்துரையாடல் ஒன்றும் இடம்பெற்றுள்ளது.

இவ்விநியோகம் இரண்டு கட்டங்களாக விநியோகிக்கப்படவுள்ளது. இரண்டு மற்றும் அதற்குக் குறைந்த அங்கத்தவர்களைக் கொண்ட குடும்பங்களுக்கு 3 கிலோ அரிசி, 2கிலோ மா, 2கிலோ சீனி மற்றும் ஒரு கிலோ பருப்பு என்பன வழங்கப்படவுள்ளது.

3 அங்கத்தவர்களும் அதற்கு மேற்பட்ட அங்கத்தவர்களைக் கொண்ட குடும்பங்களுக்கும் 5 கிலோ அரிசி, 3 கிலோ மா, 3கிலோ சீனி மற்றும் 2 கிலோ பருப்பு வழங்கப்படவுள்ளது.

அத்துடன் ஒவ்வொரு குடும்பத்திற்கும் அரை லீற்றர் மரக்கறி எண்ணெயும் சிறுவர்களுக்கான பால் மா வகைகளும் வழங்கப்படவுள்ளன.

இதேவேளை மூன்றாம் கட்ட பங்கீட்டினால் பாதிக்கப்பட்ட சமுர்த்தி முத்திரை கொண்ட குடும்பங்களுக்கு அவற்றை நிவர்த்தி செய்வதற்கு இம்முறை விசேட நடவடிக்கை எடுக்கப்பட்டு அதுதொடர்பாக பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு பின்னர் அறிவிப்பது என்பதும் நேற்றைய கலந்துரையாடலில் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

இக் கலந்துரையாடலில் உதவி அரச அதிபர்கள், பிரதேச செயலர்கள் மற்றும் கூட்டுறவுச் சங்கங்களின் பொதுமுகாமையாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ச-133)


2011இல் கோவையில் ஒரு பெருவிழா
எங்கள் அதிபரின் மணிவிழா



அமரர் நடராசா சிவகடாட்சம்
(முன்னாள் அதிபர் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி)

'2002 இல் அதிபரின் வழிப்படுத்தலில் சிறப்பாகக் கொண்டாடினோம்.
எமது கல்லூரி அன்னையின் நூற்றி ஐம்பதாவது ஆண்டு விழா'
'2011 இல் மேளதாளங்களுடன் வெகுவிமரிசையாகக் கொண்டாடுவோம்.
எங்கள் அதிபர் சிவன் கடாட்சத்தின் மணிவிழா'
'மனித உருவங்கள் மறையலாம்
மானுடம் என்றும் அழியாது'
'உயர்ந்த மனித தத்துவம் கலியுகத்தில் செழிப்பதற்கு
உத்தம மனிதர்கள் உலகில் தோன்ற வேண்டும்'

A/L 2002 மாணவர்கள்

(462)


# யாழ்.வர்த்தக முகவர்களுக்கு பொருட்களை அனுப்ப ஏற்பாடு

## ஜனாதிபதி செயலகம் தெரிவிப்பு

யாழ்ப்பாணத்திலுள்ள வர்த்தக முகவர்களுக்கு கொழும்பிலிருந்து பொருட்களைக் கப்பலில் கொண்டு செல்வதற்கு அரசாங்கம் விசேட வசதிகளை ஏற்பாடு செய்துள்ளதாக ஜனாதிபதி செயலகம் அறிவித்துள்ளது.

அத்தியாவசியப் பொருட்கள் மாத்திரமின்றி கட்டுமானப் பொருட்கள், வாகன உதிரிப்பாகங்கள்; விவசாய மற்றும் தொழில் நுட்ப துறைக்குத் தேவையான பொருட்களைக் கொண்டு செல்வதற்கும் வசதிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக ஜனாதிபதி செயலகம் தெரிவித்துள்ளது.

அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் மற்றும் இலங்கை கப்பல் கூட்டுஸ்தாபனம் ஆகியன ஒன்றிணைந்து இத் திட்டத்தை முன்னெடுக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பொறுப்பை தேசத்தைக் கட்டியெழுப்பும் மற்றும் அபிவிருத்தி செய்வதற்கான அமைச்சு மேற்கொள்கிறது.வட பகுதி மக்களுக்கு தட்டுப்பாடின்றி பொருட்களை வழங்குவது இத்திட்டத்தின் நோக்கமாகும். (ச)

## கேதார கௌரி விரதம்

அராலி ஆவரம்பிட்டி ஸ்ரீ முத்துமாரி அம்பாள் தேவஸ்தான ஸ்ரீ கேதார கௌரி விரதம் இன்று ஆரம்பமாகிறது.

இன்றுமுதல் எதிர்வரும் 21 ஆம் திகதி வரையிலான விரத நாட்களில் தினமும் விசேட அபிஷேகம் நடைபெறவுள்ளது.(ச-49)

ஒரு விடயத்தை கௌரவித்தால் ஒழிய அந்த விஷயத்தின் உண்மை புலப்படாது.

-ராஜாஜி

வலம்புரி

## பிரதமர் ரட்ணசிறியின் கருத்துக்கு உதவி வழங்கும் நாடுகளின் பதில் என்ன?

'உள்ளூர்ப் பிரச்சினையில் தலையிடுவதற்கு உதவி வழங்கும் நாடுகளுக்கு உரிமையில்லை' இவ்வாறு பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க கூறியுள்ளார்.

தனது கூற்றுக்கு வலுச்சேர்க்கும் வகையில் கல்யாணத் தரகருக்கு கல்யாணம் எப்போது? எங்கே? நடத்த வேண்டும் என்ற தீர்மானம் எடுக்கும் அதிகாரம் இல்லை என்றவாறு அவர் கூறியுள்ளார்.

சுருங்கக் கூறின் உதவி வழங்கும் நாடுகளை கல்யாணத் தரகரின் ஸ்தானத்தில் வைத்துப் பார்க்கிறார் இலங்கையின் பிரதமர்.

உள்ளூர்ப் பிரச்சினையில் தலையிடுவதற்கு உதவி வழங்கும் நாடுகளுக்கு உரிமை இல்லை என்ற பிரதமரின். கருத்துக்கு பதில் கூறும் பொறுப்பு இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளுக்குரியது.

அதே நேரம் மேற்போந்த கருத்தை இலங்கையின் சாதாரண பிரஜை ஒருவர் கூறியிருப்பாராயின் அதைப் பற்றி அலட்டிக் கொள்ளாமல் விட்டு விடலாம். ஆனால் கூறியவர் இந்த நாட்டின் பிரதமர்.

எனவே இதுவிடயத்தில் உதவி வழங்கும் நாடுகள் தமது பதிலை விரைவாக-வெளிப்படையாகத் தெரிவிக்க வேண்டும்.

இணைத் தலைமை நாடுகளின் கூட்டத்தில் அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான சமாதானப்பேச்சுவார்த்தை ஒக்டோபர் மாதத்தில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டிருந்தது. இந்த அறிவித்தலை மக்கள் நம்பிக்கொண்டிருக்கிறார்கள்.

இணைத் தலைமை நாடுகளின் அழுத்தத்தை அனைத்துத் தரப்பும் ஏற்றுக் கொள்ளும் என்ற நினைப்பே அந்த நம்பிக்கைக்கான காரணமாகும்.

இந்நிலையில் கல்யாணத் தரகருக்கு கல்யாணத்தை எங்கே? எப்போது? நடத்துவது என்பதை தீர்மானிக்கும் அதிகாரம் இல்லை எனப் பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க கூறுவது,

இணைத் தலைமை நாடுகளின் அறிவித்தலுக்கானது என்ற உண்மை உணரப்பட வேண்டியதாகும்.

ஆக, இணைத் தலைமை நாடுகளின் கூட்டத்தில் அறிவிக்கப்பட்டவாறு அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுவார்த்தை நடைபெறமாட்டாது என அனுமானிக்க முடியும்.

அப்படியானால், இணைத் தலைமை நாடுகளின் கூட்டத்தில் அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான பேச்சுவார்த்தை ஒக்டோபரில் நடைபெறும் என விடுக்கப்பட்ட அறிவித்தலுக்கான ஆதாரம் என்ன? என்பதை அந்த நாடுகளே தெரியப்படுத்த வேண்டும்.

அரசிடமும் விடுதலைப்புலிகளிடமும் ஒப்புதல் பெறாமல் ஒக்டோபரில் பேச்சு நடக்கும் என இணைத்தலைமை நாடுகள் அறிவித்திருக்குமாயின் அது மக்களை ஏமாற்றும் மிகப்பெரும் கபடத்தனமாகும்.

மாறாக உதவியைப் பெறுவதற்காக ஆம் என்று தலையாட்டி விட்டு பின்னர் வீறாப்புப் பேசும் பாணியில் பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க மேற்கண்டவாறு கூறியிருப்பாராயின், உதவியைப்பெற்று விட்டு உதைந்து தள்ளுவதற்கு ஒப்பானதாகும்.

இதனால் யார் நியாயமானவர்கள் என்பதை உதவி வழங்கும் நாடுகளின் பதிலளிப்பே தீர்மானிக்கும்.

# பேச்சுக்கள் நிச்சயம் நடைபெறும் அரச சமாதான செயலகம் தெரிவிப்பு



ஒக்டோபரில் ஒஸ்லோவில் பேச்சுக்கள் நடத்துவது தொடர்பில் நோர்வே அனுசரணையாளர்களுடன் ஈடுபாட்டுடன் செயற்பட்டு வருகிறோம். ஆகையால் நிச்சயமாக பேச்சுக்கள் நடைபெறும் என அரச சமாதான செயலகப் பணிப்பாளர் பாலித ஹோகன்ன தெரிவித்தார்.

இது தொடர்பாக எ.பி.செய்தி நிறுவனத்திற்கு அவர் தெரிவித்ததாவது;

ஜெனீவாவில் இந்த ஆண்டின் தொடக்கத்தில் பேச்சுக்களை நாம் நடத்தியிருந்தோம். ஏப்ரல் பேச்சுக்கான நாளும் குறிக்கப்பட்டது. ஆனால் விடுதலைப்புலிகள் தான் பேச்சு மேசைக்கு வரவில்லை. பேச்சு மேசைக்குத் திரும்பாமல் இருப்பதற்குக் காரணங்களைக் கூறிக்கொண்டிருக்கின்றனர்.

இலங்கையில் நிச்சயமற்ற நிலைமை இப்போதுள்ளது. அனைத்து இலங்கையினரது உரிமைகளுக்கான உத்தரவாதத்துடனான தீர்வை பேச்சுமூலம் ஏற்படுத்த அரசாங்கம் விரும்புகிறது.

ஆகையால் விடுதலைப்புலிகள் தங்களது பயங்கரவாதத்தையும் வன்முறையையும் கைவிட்டுவிட்டு பேச்சு மேசைக்கு விரைவில் திரும்ப வேண்டும்.

பிளவுபடாத ஒரே நாட்டுக்குள் மேலதிக அதிகாரத்தைப் பகிர்ந்து கொள்வதை நாம் பரிசீலிக்கின்றோம். ஆனால் வன்முறை மற்றும் பயங்கரவாதத்தின் மூலமாக தங்களது இலக்கை அடைய அவர்கள் நினைக்கலாம். தங்களது கனவைக் கைவிட்டு விட்டு பேச்சு மேசைக்கு அவர்கள் திரும்புவார்கள் என்று நம்புகின்றோம். இதைத்தான் உலக மெங்கும் நாம் பார்க்கின்றோம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ச-5)

# ஜனாதிபதி பதவியேற்ற பின்னர் யாழில் 461 பேர் காணாமல் போயுள்ளனர்

## மனித உரிமைகள் ஆணையம் தெரிவிப்பு

ஜனாதிபதியாக மகிந்த ராஜபக்ஷ பொறுப்பேற்றதன் பின்னர் இதுவரை யாழ்ப்பாணத்தில் 461 பேர் காணாமல் போயுள்ளதாக மனித உரிமைகள் ஆணையம் குற்றஞ்சாட்டியுள்ளது.

மனித உரிமைகள் ஆணையாளர் டி.ஜயவிக்கிரம கூறியுள்ளதாவது;

யாழ்ப்பாணத்தில் கடந்த ஒரு மாதத்தில் மட்டும் 59 பேர் கொல்லப்பட்டுள்ளனர். திருகோணமலையில் 14 பேரும் மட்டக்களப்பில் 4 பேரும் கொல்லப்பட்டுள்ளனர்.

யாழில் கடந்த மாதம் மட்டும் 42 பேர் காணாமல் போனதாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. திருகோணமலையில்-5, மட்டக்களப்பில்-8,(கல்முனையில் 4) பேர் காணாமல் போயுள்ளனர். இவர்களில் 5 பேர் 18 வயதுக்குக் குறைவானோர்.


யாழ்ப்பாணத்தில் கடந்த டிசம்பர் மாதம் தொடக்கம் காணாமல் போனோர் தொகை 461 ஆக அதிகரித்துள்ளது. தொடர்ந்தும் காணாமல் போவோர் தொடர்பான முறைப்பாடுகள் பெறப்பட்டு வருகின்றன.

காணாமல் போனவர்கள் தொடர்பில் எதுவித தகவலும் கிடைக்கப்பெறவில்லை. முன்னரைவிட யாழ்ப்பாணத்தில் இப்போது நிலைமை மிக மோசமாகவுள்ளது. ஊரடங்குச் சட்ட உத்தரவு தளர்த்தப்படுகிற போதும் கூட மக்கள் வீடுகளுக்குள் முடங்கிக் கிடக்க வேண்டிய நிலை உள்ளது.

யுத்த நிறுத்த காலத்தில் இப்படியானதொரு நிலை ஏற்பட்டதில்லை. கொழும்புக் கடத்தல்கள் தொடர்பில் இந்த மாதம் 37 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன. ஓகஸ்ட் மாதத்தில் யாழ்ப்பாணத்தில் 51 பேர் காணாமல் போயுள்ளனர் என்றார் ஜயவிக்கிரம. (ச-5)

# கிழக்கிற்கான உணவுப் பொருட்கள் அரசினால் அனுப்பப்படுவதில்லை

(திருகோணமலை)



தமிழ் மக்களுக்கான உணவுப் பொருட்களைத் தடுத்து நிறுத்தி அதனை ஒரு ஆயுதமாக அரசாங்கம் பாவித்து வருகிறது என்று திருகோணமலை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சி.எழிலன் குற்றஞ்சாட்டியுள்ளார்.

இது தொடர்பாக எழிலன் கூறியுள்ளதாவது;

கடந்த இரு மாதங்களாக கிழக்குப் பகுதியில் தமிழீழ விடுதலைப்புலிகளின் நிர்வாகப் பகுதிகளுக்கான அத்தியாவசியப் பொருட்களை இராணுவம் தடுத்து வருகிறது. இதனால் எமது பகுதிகளில் உணவுப்பொருட்கள் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களின் பற்றாக்குறைக்கு மக்கள் முகம் கொடுக்க நேரிட்டுள்ளது. மிகக் குறைந்த அளவிலான விநியோகமே மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

திருகோணமலை மாவட்ட அரச அதிபரின் அனுமதியூடாகத்தான் இப்பொருட்கள் கொண்டு வரப்பட வேண்டும் என்று நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது. ஆனால் திருகோணமலை அரச அதிபர் அனுமதி மறுத்து வருகிறார்.

விடுதலைப்புலிகளின் நிர்வாகப் பகுதிகளுக்கான அனைத்துப் பாதைகளும் மூடப்பட்டுள்ளன. கதிரவெளிப் பாதை மட்டும் திறக்கப்பட்டுள்ளது.

இதனால் அரச சார்பற்ற நிறுவனங்கள் எமது பகுதிகளில் பணியாற்றவில்லை. தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினர் மட்டுமே எமது பகுதிகளில் மக்களுக்கு உதவி வருகின்றனர் என எழிலன் தெரிவித்தார். (ச-5)

## வல்லிபுர ஆழ்வார் ஆலய

# சமுத்திரத் தீர்த்தத்திற்குச் செல்ல 50 பேருக்கு மட்டுமே அனுமதி

வடமராட்சி துன்னாலை ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலய வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 21 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.

இரதோற்சவம் எதிர்வரும் 5 ஆம் திகதியும் சமுத்திரத்தீர்த்தோற்சவம் 6 ஆம் திகதியும் கேணித் தீர்த்தோற்சவம் 7 ஆம் திகதியும் நடைபெறும். இரதோற்சவம் 5 ஆம்திகதி காலை 9 மணிக்கு வழமைபோல் நடைபெறும். சமுத்திரத் தீர்த்தம் 6 ஆம் திகதி பிற்பகல் நடைபெறும். வழமை போல் சக்கரம், விநாயகர், லஷ்சுமி ஆகிய விக்கிரகங்கள் இம்முறை கடற்கரைக்கு கொண்டு செல்லப்படமாட்டாது. பக்தர்கள் எவரும் கடற்கரைக்குச் செல்ல அனுமதிக்கப்படமாட்டார்கள் எனத் தெரிவிக்கப்பட்டது.

அன்று நண்பகல் ஒரு மணியளவில் விக்கிரகங்கள் எழுந்தருளி உள்வீதி உலா வந்து வெளி வீதியில் வட- கிழக்கு ஈசான மூலையில் தங்க வைக்கப்பட்டு அபிஷேகம் நடைபெறும். அபிஷேகத்தைத் தொடர்ந்து ஏற்கனவே பெயர் விபரப் பட்டியல் இராணுவ அதிகாரியிடம் சமர்ப்பிக்கப்பட்ட ஆலய பிரதம குருக்கள், உபயகாரர், தொண்டர்கள் 50 பேர் மட்டும் கடற்கரைக்குச் செல்வர். ஏனைய எவரும் கடற்கரைக்குச் செல்ல அனுமதிக்கப்படமாட்டார்கள்.

கடற்கரைக்குச் செல்லும் 50 பேரும் அனுமார் விக்கிரகத்தைக் கொண்டுசென்று சமுத்திரத்தில் தீர்த்தமாடுவர். பின்னர் அவர்கள் அங்கிருந்து கொண்டு வரும் தீர்த்தம் பக்தர்களுக்கு வழங்கப்படும். கேணித் தீர்த்தம் வழமை போல் காலை 10 மணிக்கு இடம்பெறும் எனத் தெரிவிக்கப்பட்டது. (ச-5)

# ஜே.வி.பியிடம் நாட்டை ஒப்படைக்க பொதுமக்கள் தயாராக வேண்டும்

## சோமவன்ச அமரசிங்க வேண்டுகோள்

சிறிலங்கா சுதந்திரக்கட்சியுடன் ஐக்கிய தேசியக்கட்சி கூட்டுச்சேர முயல்கின்றது. முடியுமானால் இரு தரப்பினரும் ஒன்று சேர்ந்து காட்டுங்கள். முடியாது விட்டால் இரு தரப்பினரையும் விரட்டிவிட்டு மக்கள் விடுதலை முன்னணியிடம் நாட்டை ஒப்படைக்க மக்கள் தயாராக வேண்டும் என மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் சோமவன்ச அமரசிங்க தெரிவித்தார்.

குருநாகல் சத்தியவாதி மைதானத்தில் நடைபெற்ற மக்கள் விடுதலை முன்னணியின் பிரசாரக்கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இன்று ஜனாதிபதியை வட்டமிட்டு சுற்றிக் கொண்டிருக்கின்றவர்கள் பொய் கூறி வருகின்றனர். தவறான சித்திரங்களை உருவாக்கி காட்டுகின்றனர்.

அவருக்கும் இன்று ஏற்பட்டிருப்பது ஏனைய ஜனாதிபதிகளுக்கு ஏற்பட்ட நிலைமையே. எமது கட்சியை கட்டியெழுப்பியது ஊடகத்தால் அல்ல, ஊடகங்கள் இன்றி எங்கள் கட்சியை முன்னெடுத்துச் செல்ல முடியும். ஊடகத்தால் மக்கள் விடுதலை முன்னணியைத் தோற்கடிக்க முடியாது என்றார் அவர். (ச-5)

# ஐ.நா. அமைதிப்படையில் இலங்கை இடம்பெறவில்லை

இலங்கை பாதுகாப்பு அமைச்சிற்கும் பொலிஸாருக்குமிடையிலான கருத்து முரண்பாட்டில் கிழக்குத் தீமோருக்கான ஐக்கிய நாடுகள்சபையின் அமைதிப்படையில் இலங்கை இடம்பெறவில்லை.

அமைதிப்படைக்கான 58 அதிகாரிகளின் பெயர்களை பரிந்துரைக்குமாறு இலங்கை, ஐக்கிய நாடுகள் சபையிடம் கோரியிருந்தது.

இதனையடுத்து 58 அதிகாரிகளின் பெயர்களை பாதுகாப்பு அமைச்சிற்கு பொலிஸ்மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ அனுப்பினார்.

அதன் பின்னர் பொலிஸ் மனித வள ஆதாரங்கள் பிரிவுப் பொறுப்பாளரான பிரதிப்பொலிஸ்மா அதிபர் விக்டர் பெரேராவிடம் இது தொடர்பிலான பொறுப்பை ஒப்படைத்தது.

அவர் சந்திரா பெர்னாண்டோ கொடுத்த பட்டியலில் இடம்பெற்றுள்ளவர்கள் எதுவித தேர்வு அல்லது ஆலோசனைகளும் இன்றி தெரிவு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

இதனால் சந்திரா பெர்னாண்டோ அளித்த பட்டியலை பாதுகாப்பு அமைச்சு நிராகரித்துள்ளது. இந்நிலையில் ஐக்கிய நாடுகள் சபையின் காலக்கெடு முடிபடைந்துவிட்டதால் அவர்கள் அதில் இடம் பெறவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. (ச-5)

# அடையாள அட்டை இல்லாமையால் 2 இளைஞர்கள் இராணுவத்தால் கைது

(யாழ்ப்பாணம்)

மட்டக்களப்பைச் சேர்ந்த இளைஞர்கள் இருவரை யாழ்.சிவில் ஒருங்கிணைப்பு அலுவலக இராணுவத்தினர் கைதுசெய்து யாழ். பொலிஸில் ஒப்படைத்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்டவர்கள் திருக்கோவில் தம்பிலானைச் சேர்ந்த வடிவேல் கோகுலகுமார் மற்றும் களுவாஞ்சிக்குடி மாத்தாண்டி மடத்தைச்சேர்ந்த செல்வநாயகம் முருகமூர்த்தி எனத் தெரியவந்தது.

யாழ்.நகரில் நகைக்கடை ஒன்றில் பணிபுரியும் இவர்கள் இருவரும் கப்பல் மூலம் தமது சொந்த இடங்களுக்குச் செல்ல நேற்று முன்தினம் யாழ்.சிவில் அலுவலகத்திற்குச் சென்றபோது இருவரிடமும் அடையாள அட்டைகள் எவையும் இல்லாத நிலையில் அவர்களை கைதுசெய்து யாழ்.பொலிஸில் ஒப்படைத்தனர். அவர்களை யாழ்.பொலிஸார் நேற்று யாழ்.மாவட்ட நீதிவான் இ.த.விக்னராஜா முன்னிலையில் ஆஜர்படுத்தினர்.

இவர்கள் இருவரையும் எதிர்வரும் 9 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் பொலிஸாருக்கு உத்தரவிட்டார். (ச-5)

# தீர்வுக்காக கைகூடிவரும் வாய்ப்பை இரு தரப்பும் நன்கு பயன்படுத்த வேண்டும்

## தினமணி ஆசிரியர் தலையங்கம் தெரிவிப்பு

(கொழும்பு)

இனப்பிரச்சினைத்தீர்வாக கைகூடி வரும் மற்றொரு வாய்ப்பை இரு தரப்பும் நன்கு பயன்படுத்திக் கொள்ளவேண்டுமென தமிழக நாளிதழான தினமணியின் ஆசிரியர் தலையங்கம் வலியுறுத்தியுள்ளது.

மற்றொரு முயற்சி என்ற தலைப்பில் வெளியிட்டுள்ள அந்த ஆசிரியர் தலையங்கத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

இலங்கையில் மீண்டும் லேசான நம்பிக்கைக்கீற்றுத் தென்படுகின்றது. அண்மைக் காலத்தில் நிகழ்ந்து வரும் இரத்தக்களறி ஓய்வதற்கான அறிகுறிகள் காணப்படுகின்றன.

இலங்கையில் அரசுப்படைகளுக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையே யூலை 22 இல் இருந்து செப்டெம்பர் 26 வரை நடந்த சண்டையில் 200 க்கும் அதிகமான அப்பாவிப் பொதுமக்கள் இறந்துள்ளனர்.

இது இலங்கைத்தீவில் மனிதாபிமானத்திற்கு ஏற்பட்டுள்ள மிகப்பெரும் சோதனையை வெளிப்படுத்துகின்றது என்று அங்கு போர்நிறுத்தக் கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டிருந்த நோர்வே தலைமையிலான கண்காணிப்புக்குழு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திருகோணமலை மாவட்டத்தில் உள்ள பாசனக்கால்வாயை மூடியதால் ஆத்திரம் அடைந்த இலங்கை இராணுவம் கடும் தாக்குதல் தொடுத்தது. புலிகளும் பதில் தாக்குதல் நடத்தினர். அதேசமயம் திருகோணமலை மாவட்டத்தில் ஏற்கனவே புலிகளின் வசமிருந்த பகுதியை இராணுவம் கைப்பற்றியதால் சண்டை தொடர்ந்தது.

இதன் மூலம் இரு தரப்பினருமே சண்டை நிறுத்த உடன்பாட்டை மீறியுள்ளனர். இதன் தொடர்ச்சியாக கடந்த ஏப்ரலில் இருந்து அவ்வப்போது நடைபெறும் மோதல்களால் ஆயிரக்கணக்கானோர் வீடுகளை காலிசெய்து விட்டு பாதுகாப்பான இடங்களை நோக்கிச் சென்று விட்டனர்.

இது நாட்டின் கிழக்கு வடக்கு பகுதிகளில் புதிய பிரச்சினைகளை ஏற்படுத்தியுள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

### வண்ணை வெங்கடேசருக்கு இன்று தேர்த்திருவிழா

வண்ணை வெங்கடேச வரதராஜப் பெருமாள் ஆலயத்தேர்த்திருவிழா இன்று நடைபெறவுள்ளது.

காலை 7.30 மணிக்கு வசந்த மண்டபப் பூசை இடம்பெற்று 9.30 மணிக்கு தேர்த்திருவிழா நடைபெறும்.

அத்துடன் பிற்பகல் 2 மணிக்கு மானம்பூத் திருவிழா இடம் பெறும். நாளை காலை 7 மணிக்கு கர்ணோற்சவம் இடம் பெற்று காலை 7.30 மணிக்கு வசந்த மண்டபப்பூசை இடம் பெறும். தொடர்ந்து 9 மணிக்கு சந்நிர புஸ்கரணியில் தீர்த்தோற்சவம் இடம் பெறும். (ச)

### இயல்பு...

கல்விக்காக எதையும் சமரசம் செய்தவர்கள் அல்ல. அரசியல் பொருளாதார அல்லது வேறு எந்த நலன்களுக்காகவும் கல்வியை பேரம்பேசியவர்கள் அல்ல.

ஜீ.சீ.ஈ.சாதாரண தரப்பரீட்சை மிக விரைவில் நடத்தப்படவிருக்கிறது. வருடாந்தப் பரீட்சைகளுக்கு இன்னும் சில வாரங்களே உள்ளன.

எனவே இனியும் காலம் தாழ்த்தாது மாணவர்களின் பகிஷ்கரிப்பை உடன் நிறுத்தி நடவடிக்கை எடுக்குமாறு சம்பந்தப்பட்டவர்களை வேண்டுகின்றோம்.

இடம்பெயர்ந்த பாடசாலைகளில் இருப்போர் பாடசாலைகளை விட்டு விலகியும், போதுமான போக்குவரத்துச் சேவை, தடையற்ற மின்சாரம், ஊரடங்குத் தளர்வு மற்றும் வசதிகளை வழங்கி இயல்பு நிலையை தோற்றுவித்து கல்விச்சேவை தொடர ஒத்துழைக்கும்படி சம்பந்தப்பட்ட அனைவருக்கும் வேண்டுகோள் விடுக்கிறோம் என ஆயரின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

### யாழ்....

கின்றனர். ஆனால் எந்த ஒரு தரப்பினர் சார்பாகவும் பேசமுடியாது.

எந்த பாதையை திறப்பது என்பது குறித்து அரசாங்கமும் விடுதலைப்புலிகளும் தான் முடிவு செய்யவேண்டும். யாழ்ப்பாண மனித அவலங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டுமென்று இரு தரப்பினரும் உண்மையான ஈடுபாட்டுடன் இருந்தால் அனைத்துப்போர் நடவடிக்கைகளையும் நிறுத்திவிட்டு நிலைத் தன்மையை உருவாக்க வேண்டும்.

பேச்சுக்களை நடத்தவேண்டுமானால் இரு தரப்பினரும் போர்நடவடிக்கைகளை நிறுத்தவேண்டும். பேச்சுக்கள் நடத்துவது தொடர்பில் நாம் விவாதிக்கமுடியாது. நோர்வே கண்காணிப்புக்குழுவினர்தான் பதிலளிக்க முடியும் என்றார் அவர். (ச-5)

### அரச சமாதானக்...

விடுதலைப்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் உட்பட்ட உயர் மட்டத்தரப்பினரையும் சந்திக்கவுள்ளதாகவும் தூதரகம் அறிவித்துள்ளது.

இரு தரப்பினரையும் சந்தித்து அவர்களின் முடிவுகளுடன் நாளை மறு தினம் பௌயர் இந்தியாவுக்குச் சென்று வெளியுறவுத்துறை இணையமைச்சரைச் சந்தித்து கலந்துரையாடவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை நோர்வேயின் சர்வதேச அபிவிருத்தி அமைச்சர் எரிக்சொல் ஹெய்ம் இந்த வாரஇறுதிக்குள் வருகைதரவுள்ளதாக தமக்கு அறிவிக்கப்பட்டதாக ஜனாதிபதி செயலகம் தெரிவித்தது. (ச-5)

### உயர்தரப்...

இப் பகுதிகளில் போக்குவரத்து நடவடிக்கை குறித்து பாதுகாப்பு அமைச்சின் செயலாளருடன் தான் கலந்துரையாடியதாகவும் யாழ்ப்பாணப் பெறுபேறுகளை நேற்று முன்தினமே கொழும்புக்கு எடுத்துச்செல்லப்பட்டதாகவும் அவர் கூறினார். (ச)

# புலிகளின் பகுதி நோக்கி எறிகணைத் தாக்குதல்

மட்டக்களப்பு மாவட்டத்தின் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களை இலக்குவைத்து நடத்தப்பட்ட ஷெல் தாக்குதலில் ஐந்து பேர் படுகாயமடைந்துள்ளனர்.

ஷெல் தாக்குதலுக்கு இலக்காகி 37 கால்நடைகள் இறந்துள்ளதோடு மூன்று வீடுகளும் சேதமாக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மட்டக்களப்பு வாழைச்சேனை கடதாசி ஆலை இராணுவ முகாம் மற்றும் முதற்கொட்டான்சேனை இராணுவ முகாம் ஆகியவற்றிலிருந்து நேற்று முன்தினம் மாலை 6 மணி முதல் 7.30வரை ஷெல் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (ச)

### மனிதாபிமான சட்டங்களை...

இலங்கையின் பிரதித் தலைவர் பீற்றர் பிரஹொலின் கூறியதாவது;

சர்வதேச மனிதாபிமான சட்டங்களின் படி பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கான அத்தியாவசியப் பொருட்களான உணவு, நீர், மருந்துப் பொருட்கள் ஆகியவை போர்க்காலத்திலும் கூட வழங்குவதற்கான உத்தரவாதம் அளிக்கப்படவேண்டும்.

ஆகையால் தரைவழி அல்லது வான் வழி அல்லது கடல்சார் போக்குவரத்துக்கு இரு தரப்பினரும் ஒப்புக்கொள்ள வேண்டும்.

யாழ்ப்பாணத்திற்கான அத்தியாவசியப் பொருட்கள் தொடர்ந்து செல்லாததால் நிலைமை கவலைக்குரியதாக இருக்கிறது என்றார் அவர்.

இதேவேளை மனித நேயப்பணிகளை மேற்கொள்ளும் அரச சார்பற்ற நிறுவனங்களைச் சேர்ந்தவர்களின் பாதுகாப்பிற்கு ஊறுவிளைவிக்கும் நடவடிக்கைகளை எந்தத்தரப்பும் எடுக்காமல் இருக்கவேண்டுமென சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் கேட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட மக்களுக்கான அவசர மனிதாபிமானப் பணிகளில் ஈடுபட்டு வரும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் பணிகளும் ஆபத்தினை ஏற்படுத்தும் நடவடிக்கையில் எந்தத்தரப்பும் ஈடுபடவேண்டாம்.

யாழில் உள்ள சர்வதேச செஞ்சிலுவைச் சங்க அலுவலகத்திற்கு முன்பாக நேற்று முன் தினம் இடம் பெற்ற கைக்குண்டுத் தாக்குதலையடுத்து இக்கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் காலை பகல் 11 மணியளவில் இக் குண்டு வெடிப்புச் சம்பவம் இடம் பெற்றுள்ளது. இத்தாக்குதல் செஞ்சிலுவைச் சங்கத்தின் கட்டிடத்திற்கு சேதத்தை ஏற்படுத்தியுள்ள போதிலும் உயிர்ச்சேதம் எதுவும் ஏற்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது. இச் சம்பவத்தினால் மிகுந்த கவலையடைந்துள்ளதாக ஐ.சி.ஆர்.சி. தெரிவித்துள்ளது. (ச-5)

### சமாதானப் பேச்சுக்கள் தொடர்பில்...

இந்தத் தகவல் தொடர்பாக ஹெகலிய ரம்புக்வெல ஊடகவியலாளர்களிடம் தெரிவித்துள்ளதாவது;

அரசாங்கத்தினால் முன்வைக்கப்படும் மூன்று நிபந்தனைகளை தமிழீழத்தேசியத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனால் எழுத்து பூர்வமாக அல்லது சொல்மூலமாகவோ ஒப்புக்கொள்வதின் அடிப்படையில் தான் எந்த ஒரு எதிர்காலப் பேச்சும் நடைபெறும்.

- அமைதிப்பேச்சுக்களை தொடங்குவதற்கும் நிறைவு செய்வதற்கும் ஒரு குறிப்பிட்ட காலவரையறையை தமிழீழ விடுதலைப்புலிகள் தெரிவிக்க வேண்டும்.
- கடல் வழிப்பாதையைப் பயன்படுத்தி இலங்கைக்குள் எந்தவொரு இராணுவத்தளபாடத்தையும் கடத்தமாட்டோம் என்று சர்வதேச சமூகத்தினருக்கும் உதவி வழங்கும் இணைத் தலைமை நாடுகளுக்கும் தமிழீழ விடுதலைப்புலிகள் உத்தரவாதம் அளிக்க வேண்டும்.
- அமைதிப் பேச்சுக்கள் காலத்தில் எந்தவொரு வன்முறையையும் தமிழீழ விடுதலைப்புலிகள் மேற்கொள்ளாமல் இருக்க வேண்டும்

போன்ற அரசாங்கத்தின் இந்த நிபந்தனைகளை தமிழீழ விடுதலைப்புலிகள் ஒப்புக் கொள்ளா விட்டால் பேச்சுக்கள் நடைபெறாது.

இது விடயத்தில் அவர்கள் அக்கறை காட்டாது போனால் நாங்கள் ஏற்கனவே செய்யப்பட்டு வரும் வழிகளான அனைத்துக்கட்சி மாநாடு அனைத்துக்கட்சி, பிரதிநிதிக்குழு மற்றும் வல்லுநர்கள் குழு மூலமாக இனப்பிரச்சினைக்கான தீர்வைக்காண்போம்.

தீர்வுத் திட்டம் தொடர்பில் விவாதித்து அதன் பின்னர் நடைமுறைப்படுத்துவோம். தற்போது அரசியல் கட்சிகளிடையேயான ஒத்துழைப்பு அதிகரித்து வரும் நிலையில் இது நன்மை அளிக்கக்கூடியதாக இருக்கும் எனத் தெரிவித்துள்ளார்.

இராணுவத்தின் வலிந்த தாக்குதலை நிறுத்தினால் நிபந்தனையற்ற பேச்சுக்கள் நடத்துவோம் என்று விடுதலைப்புலிகள் தெரிவித்தால் அதற்கு எமது பதில்,

எந்தவொரு ஒரு வலிந்த தாக்குதல் நடவடிக்கையையும் நாம் மேற்கொள்ளவில்லை. தமிழீழ விடுதலைப்புலிகளின் இராணுவ நடவடிக்கைகளுக்கு எதிராக அரச படைகள் தங்களை தற்காத்துக்கொள்கின்ற நடவடிக்கை மட்டுமே மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதுதான் என்றார். (ச-5)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 02.10.2006 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.